# இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (6)

# இளமை முழக்கிய பொதுமை முரசம்!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

இன்றைக்குப் பாடுபடும் பாட்டாளி வர்க்கம் - ஏழையர் சமுதாயம் - நடுத்தர மக்கள் கூட்டம் - எந்தக் கொள்கையின் வெற்றிக்காக, கொடியேந்தி நெடிய பயணம் நடத்துகிறதோ, அதற்கான விடியலை வழங்கிட விரிவான தத்துவக் கருவூலம் எழுதித் தந்தாரே! அந்தக் காரல் மார்க்ஸ், பதினேழாவது வயதில் பள்ளிக் கல்வி முடித்து, இருபத்தி நான்காவது வயதில் பத்திரிகை ஆசிரியராகி பல எதிர்ப்புகளை தாங்கி கொள்கை முழக்கிய இளைஞர்தான்.

அந்த இளமைக் காலத்திலே தான் "வேலையைத் தேர்ந்தெடுப்பது குறித்த ஓர் இளைஞனின் மனப்பதிவுகள்" என்ற ஆய்வுக் கட்டுரையில், அற்புதமான, ஆழமான, இயற்கையான தனது சிந்தனையின் வெளிப்பாடாகப் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:-

**"நாம் எந்தத் தொழிலை விரும்புகிறோமோ, எந்தத் தொழிலில் தகுதியை வளர்த்துக் கொள்கிறோமோ அந்தத் தொழிலை அடைய முடியாமலேயே போய் விடலாம். ஏனெனில், சமுதாயத்தோடு நமக்குள்ள உறவு ஏற்கனவே தீர்மானிக் கப்பட்டதாகவே உள்ளது... மனித குலத்தின் நன்மைக்காகப் பணியாற்றுவதன் மூலம் தம்மை உயர்தகுதி உடையவர்களாக்கிக் கொண்ட மனிதர்களைத்தான் வரலாறு மகத்தான மனிதர்கள் என அழைக்கிறது. மக்களின் மகிழ்ச்சிக்காகப் பாடுபடும் மனிதனே மிகவும் மகிழ்ச்சியான மனிதன்"**

மொத்த மனிதகுலத்தின் விடுதலையோடு தொடர்புடையதே யூதர்களின் விடுதலையும் என மார்க்ஸ் முழங்கினார். முதலாளித்துவ சமூக அமைப்பு என்ற எல்லைக்குள் அரசியல் விடுதலை மிகப்பெரிய முன்னேற்றம்தான். ஆனால், மனிதகுல விடுதலை அதற்கும் மேலானது என்று வாதிட்டார் மார்க்ஸ். மனிதர்கள், தங்களது சொந்த சக்தியை ஒரு சமூக சக்தியாக அறிந்து கொண்டு, அமைப்புரீதியாகத் திரண்டால்தான் விடுதலை என்பது சாத்தியம் என்றார் அவர். மார்க்ஸின் இரண்டாவது கட்டுரை "சட்டம் பற்றிய ஹெகலின் தத்துவம் குறித்த விமர்சனம். இந்தக் கட்டுரையில் முதலாளித் துவத்தைத் தூக்கி எறியும் புரட்சிகர வர்க்கம் பாட்டாளி வர்க்கமே என்று அடையாளம் காட்டிய மார்க்ஸ், அந்த பாட்டாளி வர்க்கத்திற்கு தத்துவம் என்ற ஆயுதம் தேவை என்றார்.

**"தத்துவம் தனது பொருளாயத ஆயுதத்தை பாட்டாளி வர்க்கத்திடம் பெறுகிறது. அதுபோலவே பாட்டாளி வர்க்கம் தத்துவத்திடமிருந்து தனது ஆன்மிக ஆயுதத்தைப் பெறுகிறது... வெறும் விமர்சனங்களால் பொருளாயத சக்திகள் வீழ்த்தப் படுவதில்லை. பொருளாயத சக்திகள் பொருளாயத சக்தி களால்தான் வீழ்த்தப்பட வேண்டும். ஒரு கருத்து மக்களைச் சென்றடைந்து அது அவர்களின் மனதில் பதிந்து விடுமானால், அதுவே பொருளாயத சக்தியாக மாறிவிடுகிறது"** என்ற புகழ்பெற்ற மார்க்சிய நிலையை, இந்த கட்டுரையில் தான் மார்க்ஸ் வரைந்தார்.

கார்ல் மார்க்ஸ், தமது இருபத்தி ஒன்பதாவது வயதில், ஏங்கல்ஸ் எழுதிய "கம்யூனிசத்தின் கோட்பாடுகள்" என்ற அறிக்கையின் அடிப்படையில், கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை எழுதி இறுதிப்படுத்தும் பணியை மேற்கொண்டார். தமது முப்பதாவது வயதில், அதாவது 1848, பிப்ரவரியில் "கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை" வெளியிட்டார். இதுதான் இன்றுவரை கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு முதலாவது வேலைத்திட்ட அறிக்கையாகும். இதன் அடிப்படைகள் மீதுதான் உலகெங்கும் உள்ள கம்யூனிஸ்ட்டுகள் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள். "கட்சி அறிக்கை" என உலகெங்கிலும் அழைக்கப்படும் இந்த அறிக்கை, மார்க்சியத்தின் அடிப்படைகளை விளக்குகிறது. முதலாளித்துவத்தின் தோற்றுவாயையும், வளர்ச்சியையும், அதன் எதிர்காலப் போக்கையும் துல்லியமான அறிவியல் தன்மையோடு விளக்குகிறது. இந்த அறிக்கை மூலதனத்திற்கு எதிரான கம்யூனிசத்தின் கம்பீரமான பிரகடனமாகும். **"பாட்டாளிகள் தமது அடிமைச் சங்கிலியைத் தவிர, இழப்பதற்கு ஏதுமில்லாதவர்கள்; அவர்கள் வெற்றி பெறுவதற்கென்று அனைத்துலகும் இருக்கிறது. உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!"** என்ற காவிய மணம் தோய்ந்த போர்ப் பிரகடனத்துடன் கட்சி அறிக்கை நிறைவு பெறுகிறது.

மார்க்சியத்தை உருவாக்குவதற்கு அந்தப் பேரறிவாளனோடு இணைந்து நின்று உதவிய மற்றொரு சிந்தனையாளர் பிரெடரிக் ஏங்கல்ஸ். உண்மையில் அந்தச் சிந்தனையாளர் இல்லாவிட்டால் மார்க்சியம் என்று ஒன்று, இன்று உருவாகியிருக்குமா என்பது சந்தேகம் தான். மார்க்ஸோடு இணைந்து மார்க்சியத்தின் பல கூறுகளை உருவாக்கிய பெருமை ஏங்கல்சுக்கு உண்டு. மார்க்சியம் என்று அழைக்கப்படுவது கார்ல் மார்க்சின் பெயரில் இருந்தாலும், உண்மையில் அது ஏங்கல்ஸ், மார்க்ஸ் ஆகிய இருவரது கூட்டு உழைப்பு, ஆய்வு, சிந்தனை ஆகியவற்றின் விளைவு ஆகும். உலக வரலாற்றிலேயே இருவர் இணைந்து ஓர் உலகப் பொதுவான தத்துவத்தை உருவாக்கியுள்ளனர் என்றால் அது மார்க்சியம்தான்.

ஏங்கல்ஸ், தமது பத்தொன்பதாவது வயதிலேயே, அதாவது 1839ஆம் ஆண்டு "உப்பர்டால் கடிதங்கள்" என்ற தலைப்பில் பல கடிதங்களை எழுதினார். அவை மதத்தையும், அரசனையும் எதிர்த்து எழுதப்பட்டவை ஆகும். அதனால், பல இடங்களில் பரபரப்பை ஏற்படுத்தின. அவரது இருபத்தி இரண்டாவது வயதில், ஏங்கல்சிற்கு "ரெயின்லாந்து கெஜட்" என்ற பத்திரிகையின் தொடர்பு கிடைத்தது. இந்தப் பத்திரிகையின் ஆசிரியராக கார்ல் மார்க்ஸ் பொறுப்பேற்றிருந்தார். அப்போது ஏங்கல்சிற்கு மார்க்சைத் தெரியும். ஆனால் சந்தித்தது இல்லை. மார்க்ஸ் புரட்சிகர மான கருத்துகளை இந்தப் பத்திரிகை மூலம் பரப்பினார். பொதுவுடைமைக் கருத்துகளைப் பற்றி அதிகம் எழுதினார். ஏங்கல்ஸ் இக்கருத்துகளை ஏற்றுக் கொண்டார். அவர் தமது இருபத்தி நான்காவது வயதில், 1844ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், ஜெர்மனி செல்லும் வழியில் பாரீசில் தங்க நேரிட்டது. இந்த ஆண்டில்தான் ஏங்கல்ஸ் மார்க்சை சந்தித்தார்.

இது ஒரு முக்கியமான சந்திப்பாகும். அதுமட்டுமல்லாமல், உலகத்தையே மாற்றிய ஒரு தத்துவத்தை உருவாக்குவதற்கு இந்தச் சந்திப்பு வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

இந்தச் சந்திப்பைப் பற்றியும், மார்க்சிய சிந்தனைகளைப் பற்றியும் திரு. வெ.சாமிநாத சர்மா அவர்கள், அவருடைய, "கார்ல்மார்க்ஸ்" என்ற நூலில், **"உலகில் எத்தனையோ சந்திப்பு கள் ஏற்படுகின்றன. எத்தனையோ சிநேக ஒப்பந்தங்கள் அழியாத மையினால் எழுதப்படுகின்றன. இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்துப் போடுகின்றவர்களும், பெரிய மனிதர்களாயிருந் திருக்கிறார்கள். ஆனால் மார்க்ஸ், ஏங்கல்ஸ் சந்திப்பு, நட்பு, ஒப்பந்தம், உலக சரித்திரத்தை மாற்றியமைத்ததைப் போல வேறு யாருடைய சந்திப்பும், நட்பும், ஒப்பந்தமும் மாற்றியமைக்கவில்லை. இருவருடைய சுபாவங் களும், அனுபவங்களும் வேறுவேறா யிருந்த போதிலும் ஒன்றுக்கொன்று துணை செய்வனவாயிருந்தன. எப்படி குடும்பமெனும் கப்பலை இயக்கிக் கொண்டு போவதற்கு மனமொத்த தம்பதிகள் அவசியமாயிருக்கிறதோ, அப்படியே சமதர்மமெனும் கப்பலை, கொந்தளிப்பான சமுத்திரத்தில் மிதக்க விடுவதற்கு ஒரே பார்வையுடைய இரண்டு பேர் அவசியமாயிருந்தது"** என்று வர்ணனை செய்துள்ளார்.

பிரெடரிக் ஏங்கல்ஸ், தமது இருபத்தி ஐந்தாவது வயதில், 1845ஆம் ஆண்டு மார்க்சுடன் சேர்ந்து இருவரும் கூட்டு முயற்சி ஒன்றை மேற்கொண்டனர். அதாவது, ஹெகலுக்குப் பிந்திய கால ஜெர்மானியத் தத்துவத்தைப் பற்றியது அந்த நூல். அந்த நூலின் பெயர் "ஜெர்மானியக் கருத்தியல்". இந்த நூல் மார்க்சிய இலக்கியத்தில் மிக முக்கியமானதாகும். இந்த நூலில் வரலாற்று இயல் பொருள் முதல் வாதம் என்பது பற்றி விளக்கம் இடம்பெறு வதைக் காணலாம். வரலாறு என்பது பொருளியல் தன்மை உடையது என்பதை மார்க்சும், ஏங்கல்சும் விளக்குகின்றனர். அதாவது உற்பத்தி (மனிதனுக்கும், இயற்கைக்கும் உள்ள உறவு) பரஸ்பர உறவு (ஒரு மனிதனுக்கும், மற்றொரு மனிதனுக்கும் உள்ள உறவு) என்பவைதான் மனிதனது செயலுக்குரிய இரு பகுதிகள் என்பதை விளக்குகின்றனர். இந்தப் பொருள் உற்பத்தியானதுதான் மனிதனது வாழ்வைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது. அதாவது, உற்பத்தி முறையானது வாழ்க்கை முறையைத் தீர்மானிக்கிறது. இந்த உற்பத்தி முறை சமூக உறவுகளையும், அரசியல் உறவுகளையும் தீர்மானிக்கிறது.

"கம்யூனிஸ்ட் அறிக்கை" வெளியான பின்னர், மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோரது வாழ்க்கை முழுவதும் புரட்சிகர இயக்கங்களில் பங்கெடுக்கும் போக்கில் மாறியது. அவரது இருபத்தி எட்டாவது வயதில் ஏங்கல்ஸ் ஜெர்மனிக்குச் சென்றார். அங்கு புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அங்கு நிலவிய சீர்திருத்தவாதப் போக்கினை எதிர்த்துப் போராடினார். 1849ஆம் ஆண்டு, அதாவது தமது இருபத்தொன்பதாவது வயதில், ஏங்கல்ஸ் "ஜெர்மனியில் விவசாயிகள் போராட்டம்" என்ற நூலை எழுதினார். மார்க்சிய கொள்கை வளர்ச்சியில் இது மிக முக்கியமான ஒரு நூல். வரலாற்றியல் பொருள்முதல் வாதத்தினைப் பயன்படுத்தி வர்க்கப் போராட்டம் பற்றிய விளக்கத்தை ஏங்கல்ஸ் இதில் அளிக்கிறார். மதம் பற்றியும், மதத்தின் பங்கு பற்றியும் இதில் ஒரு விரிவான விவாதம் இடம் பெறுகிறது.

**அன்புள்ள**

**மு.க.**

(முரசொலி - 13.11.2007)

# வி.பி.சிங் ஏற்றிவைத்த சமூக நீதி தீபம் அணையாது!

## முதல்வர் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

## வி.பி.சிங்குக்கு சிலை வைத்ததின் மூலம் தமிழ்நாடு அரசு பெருமையடைகிறது!

அமல்படுத்தியபோது, சில ஆதிக்க சக்திகள் அதை எதிர்த்தார்கள். வன்முறை போராட்டங்களையும் நடத்தினார்கள். அந்த நேரத்தில், அதேநேரத்தில், **தலைவர் கலைஞர் தலைமையில் இதே கலைவாணர் அரங்கத்தில் ஒரு கவியரங்கம் நடந்தது. மிகுந்த கோபத்துடன் அன்றைய நாள் கவிதை கர்ஜனை செய்தார் தலைவர் கலைஞர் அவர்கள்... அந்தக் கவிதையின் சில வரிகளை மட்டும் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன்...**

**"மண்டல் குழு பரிந்துரையை மைய அரசு ஏற்றமைக்கு மகத்தான வெற்றி விழா! மனிதாபிமானி வி.பி.சிங்கிற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கும் திரு விழா!"** என்று தொடங்கி, சமூகநீதிக்கான குரலாக தலைவர் கலைஞருடைய கவிதை வரிகள் அனல் தெறித்தது!

**"ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் எனில் அவன் உயர்சாதிக்கு மட்டும் தங்கத்தால் மூளை செய்து தலைக்குள்ளே வைத்தானா? மற்ற சாதிக்கெல்லாம் மண்டைக்குள் இருப்பதென்ன? களிமண்ணா? சுண்ணாம்பா? கட்டை விரலோ, தலையோ காணிக்கையாக இந்நாளில் எவரும் கேட்டால் பட்டை உரியும், சுடுகாட்டில் அவர் கட்டை வேகும்"** என்று தலைவர் கலைஞருடைய பேச்சில், உணர்ச்சிக் கொந்தளித்தது! இப்போதுகூட இந்த கலைவாணர் அரங்கத்தில் அந்தக் கவிதை வரிகளின் வெப்பத்தை என்னால் உணர முடிகிறது!

வி.பி.சிங் அவர்கள் பிறந்த உத்தரப் பிரதேச மாநிலத்தின் Former Chief Minister - Present Leader of Opposition - My dear brother Future Chief Minister அகிலேஷ் அவர்கள், இங்கு வருகை தந்துள்ளார். வி.பி.சிங் அவர்களுக்கு பிடித்த தலைவரான, ராம் மனோகர் லோகியா அவர்களால் உருவாக்கப்பட்ட முலாயம் சிங் அவர்களின் மகனான அகிலேஷ் அவர்கள், வி.பி.சிங் அவர்களுடைய சிலை திறப்பு விழாவுக்கு வந்திருக்கிறார்.

வி.பி. சிங் அவர்களுக்கு தாய் வீடு, உத்தரப்பிரதேசம் என்றால், தமிழ்நாடு தான், தந்தை வீடு! தந்தை பெரியார் பெயரை உச்சரிக்காமல் அவருடைய பேச்சு இருக்காது. அதுனால்தான் அப்படிப்பட்ட தந்தை பெரியாருடைய சமூகநீதி மண்ணில் வி.பி.சிங் அவர்களுக்கு முதன்முதலாக சிலை அமைக்கப் பட்டுள்ளது. நானும், மரியாதைக்குரிய வி.பி.சிங் அவர்களும் ரெண்டு முறை சந்தித்து இருக்கிறோம்.

முதல் சந்திப்பு, 1988ஆம் ஆண்டு தேசிய முன்னணியின் தொடக்கவிழா சென்னையில் நடந்தது! அப்போது இளைஞர் அணி சார்பில், மாபெரும் ஊர் வலத்தை நான் தான் தலைமை தாங்கி நடத்தி வந்தேன். கிட்டதட்ட இரண்டு லட்சம் இளைஞர்கள் பங்கெடுத்த அந்த ஊர்வலத்தை, இதே அண்ணாசாலையில், காயிதே மில்லத் கல்லூரி, அன்றைக்கு Arts College என்று பெயர். அந்த கல்லூரிக்கு அருகில் மேடை அமைத்து மாலை தொடங்கி இரவு வரை மேடையில் இருந்தபடி, வியந்தபடி பார்த்து வாழ்த்தினார் வி.பி.சிங் அவர்கள். அப்போது நான் அவரிடம் பேச வாய்ப்பு கிடைக்கவில்லை.

அடுத்த சந்திப்பு, அவர் பிரதமராக ஆனபோது, டெல்லிக்கு சென்று எம்.எல்.ஏ குழுவில் நான் இருந்தேன். சட்டமன்றத்தில் எல்லாக் கட்சி எம்.எல்.ஏக்களும் பல குழுக்கள் அமைத்தார்கள். அதில் ஒரு குழுவில் நான் இடம் பெற்றிருந்தேன். அப்போது டெல்லிக்குச் சென்றபோது, ஒவ்வொருவராக அவருக்கு அறிமுகம் செய்தார்கள். அப்போது என்னிடம் வந்தபோது, என்னை அறிமுகம் செய்து வைத்தபோது, அவர் சிரித்துக்கொண்டே சொன்னார். "இவரை எப்படி மறக்க முடியும். இவர் தான் சென்னையில் இளைஞர் படையை அணிவகுத்து நடத்தினார்!" என்று மறக்காமல் பாராட்டினார் பிரதமர் வி.பி.சிங்.

### என் வாழ்நாளில் மறக்க முடியாத பாராட்டு!

அந்த பாராட்டு என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வு! இன்றைக்கு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று அவருக்கு சிலை திறந்திருக்கிறேன் என்றால், இதைவிட என்ன பெருமை எனக்கு வேண்டும்? எங்களுடைய அழைப்பை ஏற்று, இங்கு வருகை தந்துள்ள வி.பி.சிங் அவர்களின் மனைவி சீதா குமாரி அவர்களுக்கும், அவருடைய மகன் அஜயா சிங் அவர்களுக்கும் உங்களுடைய அனைவரின் சார்பில் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வி.பி.சிங் குடும்பத்தினர் என்று உங்களை நான் அழைக்க விரும்பவில்லை. நீங்கள் வி.பி.சிங் குடும்பத்தினர் என்றால் நாங்கள் யார்? நாங்களும் வி.பி.சிங் குடும்பத்தினர்தான்!

இந்தியா முழுமைக்கும் பரவி இருக்கின்ற சமூகநீதிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள்! வி.பி.சிங் அவர்களுக்கு சிலை வைப்பது மூலமாக அவருடைய புகழ் உயருகிறது என்று பொருள் இல்லை; நாம் அவருக்கு காட்ட வேண்டிய நன்றியை காட்டி இருக்கிறோம்!

காலம் காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமூகநீதிக் கதவை திறந்து வைத்தவர் வி.பி.சிங் அவர்கள். தன்னுடைய பிரதமர் பதவி போனாலும் பரவாயில்லை என்று அதில் உறுதியாக இருந்தவர் வி.பி.சிங். அவருக்கு சிலை அமைப்பதை இந்த திராவிட மாடல் அரசு தன்னுடைய கடமையாக கருதுகிறது.

சமூகநீதியை காக்கின்ற கடமையில் இருந்து இம்மியளவும் வழுவாமல் இந்த திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது.

### ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டியது வி.பி.சிங் வரலாறு!

வி.பி.சிங் அவர்களைப் பற்றியும், அவரது தியாக வாழ்க்கைப் பற்றியும் இந்திய மண்ணில் உள்ள ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக, இளைஞர்களுக்கு அவருடைய வாழ்வு திரும்ப திரும்ப சொல்லப்படவேண்டும். அதனால்தான் மாநில கல்லூரியில் அவருடைய சிலையை அமைத்திருக்கிறோம்.

வி.பி.சிங் அவர்கள் உத்தரப்பிரதேச மாநிலத்தில் மிகப்பெரிய ஜமீன்தாருக்கு மகனாக பிறந்து, ஆடம்பர வாழ்க்கை வாய்த்தாலும், அதில் மனது ஒட்டாமல் கல்லூரி படிக்கின்ற காலத்திலேயே காந்திய இயக்கத்தில் ஈடுபட்டார். சர்வோதய சமாஜில் இணைந்தார். பூமிதான இயக்கத்தில் பங்கெடுத்தார். வினோபா அவர்களிடம் தன்னுடைய நிலங்களையே தானமாக வழங்கினார்.

1969ஆம் ஆண்டு உத்திரப்பிரதேச சட்டமன்றத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். உத்தரப்பிரதேச மாநிலத்தின் முதலமைச்சர். இந்திய ஒன்றியத்தில் வர்த்தக அமைச்சர், நிதி அமைச்சர், பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆகிய உயர் பதவிகளை வகித்தார். தேசிய முன்னணியை உருவாக்கி 1989ஆம் ஆண்டு இந்தியாவின் பிரதமராகவே ஆனார்.

வி.பி.சிங் அவர்கள் பிரதமராக இருந்தது பதினோரு மாதம்தான் என்றாலும், அவர் செய்த சாதனை என்பது மகத்தானவை! இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டப்போது, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அவர்களுடைய மக்கள்தொகைக்கு ஏற்ப, இடஒதுக்கீடு தரப்படவில்லை. அதை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்தான் பி.பி.மண்டல் தலைமையிலான ஆணையம்!

### மண்டல் பரிந்துரையை அமல்படுத்திய வி.பி.சிங்!

சமூகரீதியாகவும், கல்வியிலும் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று அழைக்கப்படுகின்ற சமூகத்துக்கு ஒன்றிய அரசுப் பணியிடங்களில் 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற பி.பி.மண்டல் பரிந்துரையின் உத்தரவை அமல்படுத்திய சமூகநீதிக் காவலர் தான் வி.பி.சிங் அவர்கள்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

